1991 அக்டோபர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்கள் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப படுகிறது.

[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை). ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am seeking a clarification

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே கிளாரிபிகேஷன் வராது. இன்டிரொடக்ஷன் ஸ்டேஜிலே அப்ஜெக்ட் பண்ணலாம். கிளாரிபிகேஷன் வராது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : சொல்லாமல் அப்ஜெக்ட் பண்ண முடியாது. அது தவறாகப் பொருளாகும். ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்டிலே என்ன சொல்லுகிறீர்கள் என்றால்

We want to take away laws a the same time அதற்குத்தான் கொண்டுவரப்படுவதாக சொல்லுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தை அறிமுகம் செய்யும்பொழுது பேரவையின் விதிப்படி அதை மறுத்துதான் சொல்ல வேண்டுமே தவிர கிளாரிபிகேஷன் கேட்பதற்கு விதியில் இடம் உண்டா என்று பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்ஜெக்ஷன் சொல்வதற்கு இடம் உண்டு. கிளாரிபிகேஷன் கேட்பதற்கு இன்டொரடக்ஷன் ஸ்டேஜிலே விதியிலே இடம் இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : Snce it is a self contradictory I am objecting.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆய்வு செய்கிற போது அதைப்பற்றியெல்லாம் அரசு எடுத்துக்கொள்ளும். அதை அரசு இப்போது ஏற்றுக்கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

முற்பகல் 11-10

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11.10

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்)

சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவை இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்,